RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in

DAILY EVENING மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 100 | ஏப்ரல்.17 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "மகளிர் இடஒதுக்கீடு... அரசியல் சாயம் பூச வேண்டிய அவசியமில்லை" : மக்களவையில் பிரதமர் மோடி பேச்சு

புதுடெல்லி: ஏப்.17-

நாட்டின் மக்கள் தொகையில் 50% உள்ள பெண்கள், முடிவெடுக்கும் இடங்களில் பங்கேற்பது காலத்தின் கட்டாயம் என தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, நாட்டின் பெண்களுக்கான உரிமையை எதிர்த்தவர்களை அவர்கள் ஒருபோதும் மன்னித்ததில்லை என குறிப்பிட்டுள்ளார்.

சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றத்திலும் மகளிருக்கு 33% இட ஒதுக்கீடு அளிக்கும் நோக்கில், அரசியல் சாசன திருத்தம் (131வது திருத்தம்) மசோதா 2026, தொகுதி மறுவரையறை மசோதா 2026, யூனியன் பிரதேச சட்டங்கள் (திருத்த) மசோதா 2026 ஆகிய மூன்று மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டன.

இதன் மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஒரு நாட்டின் வாழ்வில் சில முக்கியமான தருணங்கள் அமையும். அத்தகைய தருணங்களில், சமூகத்தின் மனநிலையும், தலைமைத்துவத்தின் திறமையும் இணைந்து ஒரு வலுவான மரபை உருவாக்குகின்றன. இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயக வரலாற்றில் இந்த தருணம் அத்தகைய ஒரு முக்கியமான தருணமே.

பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த யோசனை 25-30 ஆண்டுகளுக்கு முன்பு முதன்முதலில் கருவாகி, அதற்கான தேவை உணரப்பட்டபோதே நாம் இதைச் செயல்படுத்தியிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால், இன்று நாம் ஒரு முதிர்ந்த நிலைக்கு அதை கொண்டு வந்திருப்போம். உள்ளாட்சித் அமைப்புகளுக்கான தேர்தலில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க முன்வந்தவர்கள், நாடாளுமன்றத்தில் அளிக்க முன்வரவில்லை. அதற்குக் காரணம், தங்களுக்கு போட்டி அதிகமாகிவிடக் கூடாது என்பதே. நமது நாடு 'ஜனநாயகத்தின் தாய்' ஆகும். நமது ஜனநாயகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் பயணித்து வருகிறது. அந்த வளர்ச்சிப் பயணத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைச் சேர்க்கும் நற்பேறு இந்த அவையில் உள்ள நம் அனைவருக்கும் கிடைத்துள்ளது.

நாட்டின் மக்கள் தொகையில் பெண்கள் பாதியளவு இருக்கிறார்கள். தேசத்தைக் கட்டமைக்கும் (நாடாளுமன்ற) செயல்முறையில் அவர்கள் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தமைக்காக நாம் அனைவரும் கொடுத்து வைத்தவர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய



நாம், இந்த முக்கியமான வாய்ப்பை நழுவ விட்டுவிடக் கூடாது. இந்தியர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து, நாட்டிற்கு ஒரு புதிய திசையை வழங்கப் போகிறோம். நமது ஆட்சி நிர்வாக அமைப்பில் உணர்வுபூர்வமான அணுகுமுறையை ஊடுருவச் செய்ய, நாம் ஒரு அர்த்தமுள்ள முயற்சியை மேற்கொள்ளப் போகிறோம். இது நாட்டின் அரசியலை வடிவமைப்பது மட்டுமல்லாமல், நாட்டின் எதிர்காலத் திசையையும் நிலையையும் தீர்மானிப்பதாகவும் அமையும்.

21ஆம் நூற்றாண்டில், இந்தியா ஒரு புதிய தன்னம்பிக்கையுடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இன்றைய உலகில் இந்தியாவுக்கு கிடைத்துள்ள அங்கீகாரத்தை நாம் அனைவரும் உணர்கிறோம். இது நம் அனைவருக்கும் பெருமைக்குரிய ஒரு தருணமாகும். 'வளர்ச்சியடைந்த இந்தியா' என்பது வெறும் ரயில்வே வசதிகளை மட்டும் குறிப்பதல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன். சாலைகள், உள்கட்டமைப்பு அல்லது பொருளாதார மற்றும் வளர்ச்சிப் புள்ளிவிவரங்கள் மட்டுமே ஒரு வளர்ச்சியடைந்த இந்தியா என்று கருதும் குறுகிய கண்ணோட்டம் கொண்டவர்கள் நாங்கள் அல்ல. 'அனைவருடனும் இணைந்து அனைவருக்குமான வளர்ச்சி' என்ற மந்திரத்தை உண்மையாகவே பிரதிபலிக்கும் ஒரு 'வளர்ச்சியடைந்த இந்தியாவையே' நாங்கள் விரும்புகிறோம். நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவீதம் உள்ள பெண்கள், கொள்கை உருவாக்கத்தில் ஒரு அங்கமாக மாற வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும்.

நாம் ஏற்கெனவே இதில் காலதாமதம் செய்துவிட்டோம். அதற்கான காரணங்கள் எதுவாக இருந்தாலும், அதற்குப் பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும், இந்த எதார்த்தத்தை நாம் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். பெண்களுக்கான இடஒதுக்கீடு தொடர்பான இந்தச் செயல்முறை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டன. ஒரே ஒரு கட்சியைத் தவிர, நாங்கள் சந்தித்த மற்ற அனைவரும் கொள்கை ரீதியாக இதற்கு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

அரசியல் ரீதியில் மட்டுமே சிந்திப்பவர்களுக்கு நான் ஒரு அறிவுரையை வழங்க விரும்புகிறேன். நம் நாட்டில் பெண்களுக்கான இடஒதுக்கீடு குறித்த விவாதம் தொடங்கியதிலிருந்து, அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும், பெண்களுக்கான இந்த உரிமையை எதிர்த்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை நாட்டின் பெண்கள் ஒருபோதும் மன்னித்ததில்லை.

பெண்களுக்கான இட ஒதுக்கீடு நாட்டின் ஜனநாயகத்துக்குச் சாதகமாக அமையும். நாட்டின் கூட்டு முடிவெடுக்கும் செயல்முறைக்கு வலுசேர்க்கும். மேலும், இதற்கான பெருமை நம் அனைவருக்கும் உரித்தானதாக இருக்கும். இதற்கான முழு உரிமையும் ஆளுங்கட்சிக்கோ அல்லது மோடிக்கோ மட்டும் உரியதல்ல. அதேபோல, இங்கு அமர்ந்திருக்கும் மற்றவர்களுக்கு மட்டும் உரியதல்ல. இதற்கு ஒரு அரசியல் சாயம் பூச வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றே நான் கருதுகிறேன்'' என்று பிரதமர் மோடி பேசினார்.

முன்னதாக, 'மகளிர் இடஒதுக்கீடு என்ற போர்வையில் வரும் தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்ப்பதில் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் நிற்கும்' என காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

## பிரபுவின் தீவிர வாக்கு சேகரிப்புக்கு பொதுமக்கள் அமோக ஆதரவு

காரைக்குடி, ஏப்.17-

காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மருத்துவர் பிரபு, சாக்கோட்டை மற்றும் புதுவயல் சுற்றுவட்டார பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அவரை காண மக்கள் கூட்டம் கூட்டமாக திரண்டு உற்சாக வரவேற்பளித்தனர். பொதுமக்களுடன் நேரடியாக சந்தித்து அவர்களின் கோரிக்கைகள் மற்றும் குறைகளை கேட்டறிந்த பிரபு, அவற்றை தீர்க்க தேவையான நடவடிக்கைகள்




எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

இதனால் அப்பகுதியில் தேர்தல் பரப்புரை உற்சாகம் மேலும் அதிகரித்துள்ளது.

## "தொகுதி மறுவரையறையால் தமிழகத்துக்கு பாதிப்பு இருக்காது; மத்திய அரசு உறுதியளித்துள்ளது" இபிஎஸ்

சென்னை: ஏப்.17-

"தொகுதி மறுவரையறையால் தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



கோயம்புத்தூர் தெற்கு சட்டப்பேரவைத் தொகுதியில் எடப்பாடி கே. பழனிசாமி சித்தாபுதூர் வி.கே.கே மேனன் சாலை அருகில் சாலை வலம் வந்து பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது அவர் பேசும்போது, "தொகுதி மறுவரையறையால் பாதிப்பு இருக்காது என மத்திய அரசு உறுதியளித்துள்ளது. தமிழகம் உட்பட எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார். மக்கள் மகிழ்ச்சியடையும் வகையில் தொகுதி மறுவரையறை இருக்கும்.

மகளிருக்கு 33 % இட ஒதுக்கீடு கிடைக்காமல் தடுக்கவே ஸ்டாலின் தொகுதி மறுவரையறையை எதிர்க்கிறார். பெண்கள் மத்தியில் மத்திய அரசுக்கு நல்ல பெயர் கிடைத்துவிடும் என நினைக்கிறார். பல வருடங்கள் மத்தியில் அமைச்சராக இருந்தவர் ப. சிதம்பரம். நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் தமிழ்நாட்டுக்கு என்ன கொண்டு வந்துள்ளார்?, எங்களைப் பற்றி பேச ப.சிதம்பரத்துக்கு என்ன தகுதி இருக்கிறது? மத்திய அரசு கூறிய கருத்தை தான் நான் தெரிவித்தேன். தொகுதி மறுவரையறை விவகாரத்தில் ஸ்டாலின் டபுள் கேம் ஆடுகிறார்.

கோவை மக்கள் உஷாரான மக்கள். இங்கு எங்கேயுமே கருப்புக்கொடி இல்லை. ஸ்டாலினுக்கு தோல்வி ஜுரம் வந்துவிட்டது. அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு பொய் வழக்குப் போட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்." என்று பழனிசாமி தெரிவித்தார்.

## தொகுதி மறுவரையறை மசோதா நகலை எரித்து முதல்வர் ஸ்டாலின் போராட்டம்

நாமக்கல்: ஏப்.17-

தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றியும், மசோதா நகலை தீயிட்டு எரித்தும் தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திமுகவினர் நாமக்கல்லில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். தமிழகத்தில் வீடுகள் தோறும் கருப்புக் கொடியேற்றி எதிர்ப்பை பதிவு செய்ய வேண்டும் என திமுக தலைவர் முதல்வர் ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

இதன்பேரில் மாநிலம் முழுவதும் திமுகவினர் தொகுதி மறுவரையறை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏந்தியும், வீடுகளின் முன் கருப்புக் கொடி கட்டியும், கோலமிட்டும் எதிர்ப்புகளை தெரிவித்தனர்.



இச்சூழலில் தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் சேலத்தில் இருந்து நாமக்கல்லுக்கு நேற்று இரவு வந்தார். நாமக்கல் நல்லிபாளையத்தில் உள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் முதல்வர் ஸ்டாலின் தங்கினார். தொடர்ந்து இன்று காலை நாமக்கல் நல்லிபாளையத்திற்கு கருப்பு உடை அணிந்து முதல்வர் ஸ்டாலின் வந்தார்.

இதனையடுத்து அங்கு செல்லப்பன் என்பவரது வீட்டின் முன் உள்ள கொடிக் கம்பத்தில் தொகுதி மறுவரை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடியேற்றினார். மேலும், மசோதா நகலை தீயிட்டு எரித்தார்.

முன்னதாக தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், வெல்வோம் எனவும் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் கோஷம் எழுப்பப்பட்டது. தொடர்ந்து நாமக்கல் உழவர் சந்தைக்கு வந்த முதல்வர் ஸ்டாலின் அங்கு விவசாயிகள், மக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது நாமக்கல் தொகுதி திமுக வேட்பாளர் ராணி, கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முதல்வர் ஸ்டாலின் பதிவு: தொடர்ந்து, இன்று நடைபெற்ற போராட்டம் குறித்து தமிழக முதல்வர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழ்நாடெங்கும் எதிர்ப்புத்தீ பரவட்டும், பாசிச பா.ஜ.க.வின் ஆணவம் வீழட்டும். அன்று, தமிழ்நாட்டில் பற்றத் தொடங்கிய இந்தி எதிர்ப்புத் தீ டெல்லியைச் சுட்டெரித்தது. டெல்லி பணிந்த பின்பே எங்கள் தீ தணிந்தது. இன்று, தமிழரைச் சொந்த நாட்டில் அகதிகளாக்கும் கருப்புச் சட்டத்தின் நகலை எரித்து மற்றுமொரு தீயினைப் பற்ற வைத்திருக்கிறேன்.

இத்தீயும் திராவிட நாடெங்கும் பரவும். பாஜக.வின் ஆணவத்தை அடக்கிக் காட்டும். "தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ'' எனத் தெரிவித்துள்ளார்.

## கோடை விடுமுறையை மாணவர்கள் பயனுள்ளதாக மாற்ற வேண்டும்: பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தல்

சென்னை: ஏப்.17-

கோடை விடுமுறைக் காலத்தை மாணவர்கள் பயனுள்ளதாக மாற்ற வேண்டுமென பள்ளிக்கல்வித் துறை அறிவுறுத்தியுள்ளது. தமிழக பள்ளிக்கல்வி பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு கோடை விடுமுறை (ஏப். 17) முதல் வழங்கப்பட்டுள்ளது.

மீண்டும் பள்ளிகள் ஜூன் 1ம் தேதி திறக்கப்பட உள்ளன. எனவே இந்த விடுமுறை நாட்களில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி பெற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் ச.கண்ணப்பன் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு: மாணவர்கள் விடுமுறை நாட்களில் கடல், ஆறு, ஏரி, குளம் மற்றும்




குட்டை போன்ற நீர்நிலைகளில் குளிப்பதற்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டாம்.

கோடை வெப்பம் அதிகமாக இருப்பதால் வெளிப்புற விளையாட்டுகளின் போது அதிகளவு தண்ணீரை அருந்தச் செய்யுங்கள். வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் வெளியே செல்வதையும், விளையாடுவதையும் தவிர்க்கவும்.

விடுமுறை நாட்களில் சில மாணவர்கள் தங்கள் உடல் மற்றும் மனநலனைப் பாதிக்கும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அதை சரியாகக் கையாள வேண்டும்.

அதன்படி தனிமை உணர்வுகளைத் தடுக்க நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் சேர்ந்து விளையாடுதல், உணவு அருந்துதல், இசை நிகழ்ச்சிகளைக் கவனித்தல் ஆகியவற்றின் மூலம் சமூக தொடர்புகளை ஊக்குவிக்கவும், மனநலனைப் பேணவும் முடியும். டி.வி, செல்போன் ஆகியவற்றைப் பார்ப்பதில் அதிகமான நேரத்தை செலவிடுவதைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும்.

மாணவர்களின் வளர்ச்சிக்கு சமச்சீரான உணவு அளிப்பது அவசியம். எனவே பராம்பரிய உணவு வகைகளைத் தரவேண்டும். கோடை காலத்துக்கு ஏற்ற பழ வகைகளை வழங்க வேண்டும்.

இதுதவிர மாணவர்களை அருகில் உள்ள பொது நூலகங்களுக்கு அழைத்துச் சென்று ஒரு மணி நேரமாவது புத்தகங்களைப் படிக்க ஊக்குவிக்கவும்.

அவர்களின் ஆர்வங்களைப் பொருத்து காமிக்ஸ் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள், சிறார் கதைகள் மற்றும் நீதி நூல்களைப் படிக்க அறிவுறுத்த வேண்டும்.

இசை, நடனம், ஓவியம் போன்றவற்றில் ஆர்வமுள்ள மாணவர்களை விடுமுறை நாட்களில் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

தினமும் இருவேளை பல் துலக்கி, குளித்தல் போன்ற பழக்கங்களை ஊக்குவிக்க வேண்டும். பெரியோர்களை மதிக்கவும் அவர்களுக்கு உதவி செய்யவும் பழக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நீலகிரி மாவட்டத்தில் வாக்குபதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நீலகிரி, ஏப்.17-

நீலகிரி மாவட்டத்தில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு வாக்குபதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2026 ஐ முன்னிட்டு, வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்கள் வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, 109 கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கூடலூர் மார்னிங் ஸ்டார் பள்ளியில் நடைபெற்ற இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பினை, பொதுப்பார்வையாளர் 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி எஸ்.ஹரீஷ், இ.ஆ.ப அவர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் நேரில் பார்வையிட்டு, அறிவுரைகளை வழங்கினார்கள். நீலகிரி மாவட்டத்தில், 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி ரெக்ஸ் மேல்நிலைப்பள்ளியிலும், 110குன்னூர் சட்டமன்ற தொகுதி ஜோசப் மேல்நிலைப்பள்ளியிலும், 109கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மார்னிங் ஸ்டார் மேல்நிலைப்பள்ளியிலும், 23 ஏப்ரல் 2026 வாக்குப்பதிவு நாளன்று 736 வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றவுள்ள 3,532 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு வாக்குப்பதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது.

இப்பயிற்சி வகுப்பில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்முறை விளக்கம், வாக்குச்சாவடி அலுவலர்களின் பொறுப்புகள், டெண்டர் வாக்கு கையாளுவது ஆகியவை குறித்து பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில் 109 கூடலூர் சட்டமன்ற பொது பார்வையாளர் அவர்கள் தெரிவித்ததாவது:

மேலும், வாக்குப்பதிவு முந்தைய நாள் மேற்கொள்ள வேண்டிய பணிகள், வாக்குப்பதிவு முடிந்த பின் மேற்கொள்ள வேண்டிய பணிகள், மாதிரி வாக்குப்பதிவுகள் முடிந்த பின் பின்பற்ற வேண்டிய வழிகள் ஆகியவற்றை நன்றாக தெரிந்திருக்க வேண்டும். மேலும், இப்பயிற்சியில் ஏதேனும் சந்தேகங்கள் இருக்கும் பட்சத்தில் சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் கேட்டு தெரிந்து கொள்வதோடு மட்டுமின்றி, Ecinet Pro Module app குறித்து நன்றான தெரிந்திருக்க வேண்டும் எனவும், தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வழிமுறைகள் அனைத்தையும், தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களும் பின்பற்றி பணியாற்ற வேண்டும் எனவும், 109 கூடலூர் சட்டமன்ற பொது பார்வையாளர் அவர்கள் தெரிவித்தார்.இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா , உதகை வருவாய் கோட்டாட்சியர் .டினு அரவிந்த், கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் குணசேகரன் உட்பட பலர் உடனிருந்தனர்.





# சேம்பார் பள்ளியில் மாணவர்களுக்கு பிரிவு உபச்சார விழா

காளையார் கோவில் ஏப்.17-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியம்சேம்பார் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8ம் வகுப்பு மாணவர்களுக்கு பிரிவு உபச்சார விழா நடந்தது. சேம்பார் நடுநிலைபள்ளியில் நடந்த நிகழ்ச்சிக்கு, தலைமை ஆசிரியர் சுரேஷ் தலைமை தாங்கினார். பட்டதாரி ஆசிரியர் காளீஸ்வரன் வரவேற்றார். பள்ளியில் 8 ம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவிகள் அடுத்த கல்வியாண்டில் வேறு பள்ளியில் 9ம் வகுப்பு சேர உள்ளனர்.இதையொட்டி நடந்த உபச்சார நிகழ்ச்சியில் மாணவர்கள், ஆசிரியர்கள் கேக் வெட்டி கொண்டாடினர். தொடர்ந்து, விடுமுறை நாட்களில் மாணவ, மாணவிகள் சைக்கிள் ஓட்டுதல், நீச்சல் பழகுதல் போன்றவற்றை கற்றுக்கொள்ள வேண்டும்.விடுமுறை நாட்களில் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என ஆசிரியர்கள் அறிவுரை வழங்கினர். தலைமை ஆசிரியர் மாணவர்களின் எதிர்கால படிப்பு பற்றியும் அவர்களின் கனவுகள் பற்றியும் எடுத்துரைத்தார். எட்டாம் வகுப்பு மாணவர்கள் பள்ளிக்கும் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு அது வழங்கினர். அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களுக்கு அறிவுரைகள் வழங்கினர். எட்டாம் வகுப்பு மாணவர்கள் கெவின்ரியாசன், சஸ்மிதாஆகியோர் தங்கள் அனுபவங்களை எடுத்துரைத்தனர். எட்டாம் வகுப்பு மாணவர்கள் தலைமைஆசிரியர் அவர்களுடன்குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் காளீஸ்வரன், முத்துக்குமார், முருகன், சகாயசெல்வி, பாரதி மலர்,மற்றும் தனபாக்கியம் ஆகியோர்கலந்து கொண்டனர்.பள்ளி மேலாண்மைகுழு உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மாணவர்கள் இந்நிகழ்வில்கலந்து கொண்டனர். ஆசிரியை சகாய செல்வி நன்றியுரை கூறினார்.



# "முதன்மை தொகுதி உருவாக்குவேன்!" - தேர்தல் களத்தில் ராஜன் செல்லப்பா சவால்

மதுரை, ஏப்.17-

திருப்பரங்குன்றம் 16 கால்மண்டபம் முன்பு திருப்பரங்குன்றம் சட்டமன்றதொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் வி.வி. ராஜன் செல்லப்பா பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தார். அப் போது அவருக்கு பொதுமக்கள் வாணவேடிக்கையுடன் மலர்கள்தூவியும், ஆரத்தி எடுத்தும்வரவேற்பு கொடுத்தனர். பின்னர் ராஜன் செல்லப்பா பேசியதாவது: மலை மேல் உள்ள காசி விசுவநாதர் கோவிலுக்கு பக்தர்கள் எளிதாக சென்று வர ரோப்கார் வசதியை ஏற்படுத்த வேண்டும் என 4 முறை சட்டமன்றத்தில் குரல் கொடுத்தேன். ரூ.23 கோடிக்கு ரூ.5 கோடி நிதி ஒதுக்கி திட்ட அறிக்கையோடு முடக்கிவிட்டனர். பாதாள சாக்கடைக்கு குரல் கொடுத்தேன். அதற்கான பணி ஆமை வேகத்தில் நடக் கிறது. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ. என்பதால் தி.மு.க.விடம் மக்களுக்கான திட்டங்களை பெறபோராடினேன். திருப்பரங்குன்றம் முருகன் கோவிலுக்கு லட்சுமி தீர்த்தகுளம் சீரமைப்பு பணி, தீயணைப்பு நிலையம் கொண்டு வருவதில் சட்டசபையில் தொடர்ந்துகுரல் கொடுத்தேன். ஜெயலலிதாவால் கொண்டுவரப் பட்டதாலிக்கு தங்கம், பெண்களுக்கு இருசக்கர வாகனம், மாணவர்களுக்கு மடிக்கணினி, மினி கிளினிக் போன்ற மக்கள் திட்டங்களை தி.மு.க. அரச முடக்கிவிட்டது. திருப்பரங்குன்றம் தொகுதியை முதன்மை தொகுதியாக உருவாக்கபாடு படுவேன் என்றார். நிகழ்ச்சியில்தகவல் தொழில் நுட்பபிரிவுமாநில செயலாளர் வி.வி.ஆர். ராஜ்சத்யன்,திரைப்பட இயக்குனர்செந்தில் தியாகராஜன், எம்.ஜி.ஆர். இளைஞர் அணி மாவட்ட செயலாளர் வக்கீல் ரமேஷ், ஒன்றிய செயலாளர் நிலையூர்முருகன், எம்.ஜி.ஆர். இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கோ.பாரி, வட்ட செயலாளர் பாலா, பொதுக்குழு உறுப்பினர் மரக்கடை முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியத்தில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி வேட்பாளர் தீவிர வாக்கு சேகரிப்பு

திருப்பத்தூர் : ஏப்.17-

திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியின் வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் உமா கண்ரங்கம் தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றிய ஊராட்சிக்கு உட்பட்ட துறையேரி, செட்டியப்பனூர், கரீமா பாத், இந்திரா நகர், சின்ன வேப்பம்பட்டு, கள்ளுபள்ளி, கலந்திரா உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்து சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளரும் ஒன்றிய கவுன்சிலர் செந்தில் குமார், கூட்டணி கட்சி நிர்வாகிகள் தேமுதிக மாவட்ட பொருளாளர் ஆஞ்சி, தலைமை கழகப் பேச்சாளர் ரஜினி, ஒன்றிய அவை தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்து வருகின்றனர்



■ எஸ் நாகஜோதிக்கு வாக்குகள் சேகரிப்பு நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் எஸ் நாகஜோதிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு மைக்கேல் பாளையம் நிலக்கோட்டை கொடைரோடுமட்டப்பாறை சக்கையா நாயக்கனூர் ஆகிய பகுதிகளில் தேர்தல் பிரச்சார கூட்டங்கள் நடைபெற்றது சிறப்பு அழைப்பாளராக ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி கலந்து கொண்டு திமுக வேட்பாளர் நாகஜோதி சூரியன் சின்னத்தில் வாக்குகள் கேட்டு பிரச்சாரம் செய்தார் நிலக்கோட்டை திமுக ஒன்றிய செயலாளர் மணிகண்டன் தெற்கு ஒன்றிய செயலாளர் சௌந்தரபாண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் கரிகால பாண்டியன் மேற்கு தேர்தல் பொறுப்பாளர் கம்பம பாண்டியன் மாவட்ட திமுக துணைச் செயலாளர் நாகராஜன் துணை ஒன்றிய செயலாளர் வெள்ளிமலை பேரூர் கழகச் செயலாளர் ஜோசப் கோவில் பிள்ளை தாஸ் என்ற ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் தீவிர பிரச்சாரம்

போடிநாயக்கனூர் ஏப்.17-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர். ஓ. பன்னீர்செல்வம்.இராசிங்கபுரம், சூழ புரம் , நாகலாபுரம், மல்லிகாபுரம், கெஞ்சம்பட்டி பகுதிகளிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்

எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெறச் செய்யுமாறு அன்போடு வேண்டுகின்றேன்.... நம்முடைய பகுதியில் இருக்கும் பொது பிரச்சனைகளை நான் வெற்றி பெற்று வந்த உடனேயே அனைத்து குறைகளையும் நிவர்த்தி செய்து கொடுப்பேன். எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன் என்றார்...இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், கிளைச் செயலாளர்கள் ஐயப்பன், கணேசன், வட்டார காங்கிரஸ் கமிட்டி தலைவர் கண்ணன், கலைச்செல்வன், ராமர், ரகுநாத் கணேசன், ஆனந்தன் உள்பட பகுதி பொதுமக்களும் தாய்மார்களும் பெரியோர்களும் கழகத் தொண்டர்களும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்...பெண்கள் மலர் தூவி வரவேற்று பூரண கும்ப மரியாதை செலுத்தினர்...

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன் மற்றும் இந்த பகுதியின் செயலாளர் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி அனைத்து நிர்வாகிகளும் தாய்மார்களும் தோழர்களும் தொண்டர்களும் கலந்து கொண்டானர்.



■ மதுரை மாவட்டம், உசிலம்பட்டி சார் ஆட்சியர் அலுவலகத்திலிருந்து 100% வாக்களிப்பை வலியுறுத்தி மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்ற பாரம்பரிய முறையிலான முளைப்பாரி ஊர்வலத்தை துவக்கி வைத்தார்.சுமார் 200க்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற ஊர்வலம் உசிலம்பட்டி சார் ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து தொடங்கி உசிலம்பட்டி தற்காலிக பேருந்து நிலையம் வரை நடைபெற்றது.தொடர்ந்து மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார்,இ.ஆ.ப தலைமையில் பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரும் வாக்காளர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.மகளிர் சுய உதவிக் உறுப்பினர்கள் பாரம்பரிய முறையில் கும்மி அடித்து "என் வாக்கு என் கடமை ரு 100% வாக்களிப்போம்" என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.



# செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 7வது வார்டில் திமுக வேட்பாளருக்கு உற்சாகமான வரவேற்பு

மாதவரம், ஏப்.17-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குகூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு செங்குன்றம் பேரூர் கழக நகர பொறுப்பாளர் ஆர்.டி.சுதாகர் தலைமையில்7வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் 7வது வார்டு செயலாளர்சுகுமார், பேரூர் கழக துணைச் செயலாளர் முனீஸ்வரி சுகுமார்ஆகியோர் ஏற்பாட்டில் 7வது வார்டு திமுக நிர்வாகிகள் மோகன்குமார், வசந்த், தமீம் அன்சாரி, யுவராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். அப்போதுபட்டாசு வெடித்து வேட்பாளருக்கு ஆரத்தி எடுத்து மலர்மாலைஅணிவித்து பிரம்மாண்டமாக வரவேற்ப்பு அளித்தனர்.



■ நிலக்கோட்டை பூ மார்க்கெட் பகுதிகளில் அதிமுக வேட்பாளர் தேன்மொழி சேகர் இரட்டை இலை சின்னத்துக்கு வாக்குகள் சேகரித்தார் கிழக்கு ஒன்றிய செயலாளர் யாகப்பன் மேற்கு ஒன்றிய செயலாளர் நல்லதம்பி அம்மையநாயக்கனூர் நகர செயலாளர் தண்டபாணி முன்னாள் எம்பி உதயகுமார் நிலக்கோட்டை நகரச் செயலாளர் வி எஸ் எஸ் சேகர் முன்னாள் சேர்மன் மூர்த்தி நிலக்கோட்டை நகர பொருளாளர் பூக்கடை சரவணன் முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் சரவணன் ஜேசுதாஸ் மோகன் குமார் வக்கீல் பிரிவு துணை அமைப்பாளர் மேற்கு ஒன்றிய தகவல் தொழில்நுட்ப பிரிவு பொறுப்பாளர் பாலா உள்பட கலந்து கொண்டனர்







## 32வதுவார்டில் திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனத்திற்கு பிரம்மாண்டமான வரவேற்ப்பு

மாதவரம், ஏப்.17-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி திமுக வேட்பாளரும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளருமான எஸ்.சுதர்சனத்திற்கு 32 வது வார்டு வட்ட செயலாளர் எம்.சரவணன் தலைமையில் மாதவரம் தெற்கு பகுதி செயலாளர் துக்காராம், 32 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஏழுமலை ஆகியோர் முன்னிலையில் 32 வது வார்டில் உள்ள அனைத்து பகுதிகளில் உள்ள வாக்காளர்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். அப்போது வேட்பாளருக்கு பட்டாசு வடித்து பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்தும், ஆர்த்தி எடுத்தும் பிரம்மாண்டமாக வரவேற்ப்பு அளித்தனர். மேலும்தேர்தல் பணிமனை திறக்கப்பட்டது. இதில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.





## அதிமுக வேட்பாளருக்கு புரட்சிபாரதம் கட்சி நிர்வாகிகள் பிரம்மாண்டமான வரவேற்ப்பு

மாதவரம், ஏப்.17-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்றதொகுதி அதிமுக வேட்பாளரும் திருவள்ளூர்கிழக்கு மாவட்ட செயலாளருமான வி.மூர்த்திக்கு ஒன்றிய செயலாளர் செந்தில்குமார் தலைமையில் வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் ஊராட்சிக்கு உட்பட்ட காட்டுநாய்க்கன் பழங்குடி நகர்,டாக்டர் வரபிரசாத்நகரில் உள்ள வாக்காளர்களிடம் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். அப்போது புரட்சிபாரதம் கட்சி சார்பில் மாவட்டசெயலாளர் கே.என்.எம்.குமார் தலைமையில் பட்டாசு வெடித்து வேட்பாளருக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்தும் பெண்கள்திரளாக கலந்துகொண்டு ஆர்த்தி எடுத்து பிரம்மாண்டமாக வரவேற்ப்பு அளித்தனர். இதில் புரட்சிபாரதம் கட்சி நிர்வாகிகள் மாவட்டதுணை செயலாளர் சுரேஷ்குமார், முருகேசன், ஒன்றிய செயலாளர் சிலம்பரசன், மாவட்ட கொள்கை பரப்பு செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும்சுகுமார், ரகு, சதீஷ், சேகர், சேட், செல்வகுமார், ராமு, ஆனந்தன், இசைஅமுதம், முக்கேஷ், ராகுல், செல்வம், சதிஷ், ஸ்டீபன் உள்ளிட்ட தேசிய ஜனநாயககூட்டணி கட்சியின் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

## தேனி மாவட்டத்தில் வாக்குபதிவு நாளன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



தேனி ஏப். 17-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம் 199.பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் வாக்குப்பதிவு நாளன்று தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களிடமிருந்து தபால் வாக்கு சேகரிக்கும் பணிகள் நடைபெற்றதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ் ஜீத்சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டுதேனி மாவட்டத்தில்உள்ள 198.ஆண்டிபட்டி, 199. பெரியகுளம்(தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும்201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 1,395 வாக்குச் சாவடிமையங்களுக்கு 1674 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும் (PO), நிலை1 (PO-1) வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1674 நபர்களும், நிலை 2 (PO-2) வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில் 1674 நபர்களும், நிலை 3 (PO-3) வாக்குப்பதிவு அலுவலர்கள் நிலையில்1674நபர்களும் என மொத்தம் 6,696 நபர்கள் வாக்குப்பதிவு பணியில் ஈடுபடஉள்ளார்கள். மேற்குறிப்பிட்ட அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சிவகுப்பு 28.03.2026 அன்று நடைபெற்றதைத் தொடர்ந்து, இரண்டாம்கட்ட பயிற்சி வகுப்பு இன்று 198.ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்கு வேளாங்கன்னி மாதாமெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், 199.பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், 201.கம்பம் சட்டமன்றத் தொகுதிக்கு ஹாஜி கருத்தராவுத்தர் கௌதியா கல்லூரியிலும் நடைபெற்றது. மேலும், வாக்குப்பதிவு நாளான்று தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்களிடமிருந்து தபால் வாக்கு சேகரிக்கும் பணிகளும் நடைபெற்றது. அதனடிப்படையில் 199.பெரியகுளம் சட்டமன்றத் தொகுதிக்கு மேரிமாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, 200.போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் வாக்குப்பதிவு அலுவலர்களிடமிருந்து தபால் வாக்கு சேகரிக்கும் பணிகள் நடைபெற்றதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வுகளில், தேர்தல்நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர் .ரஜத்பீடன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தமிழரசி, தேர்தல் நடத்தும்அலுவலர்/ மாவட்டவழங்கல் அலுவலர்.நல்லையா, முதன்மைக்கல்வி அலுவலர்.நாகேந்திரன், உதவிதேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வட்டாட்சியர்கள். சந்திரசேகரன் (போடிநாயக்கனூர்),மருதுபாண்டி (பெரியகுளம்), வட்டாட்சியர் (தேனி).சதீஸ்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## மதுராந்தகத்தில் தமிழக சட்டமன்றத் தேர்தல் முன்னிட்டு பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளிகள் வெல்பேர் டிரஸ்ட் இணைந்து தேர்தல் விழிப்புணர்வு பேரணியை நடைபெற்றது



மதுராந்தகம் ஏப். 17-

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் தமிழக சட்டமன்ற தேர்தல் முன்னிட்டு பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளிகள் வெல்பேர் டிரஸ்ட் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அதிகாரிகள் அறிவித்தலின்படி பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளிகள் வெல்பேர் டிரஸ்ட் இயக்குனர் கவிதா தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக மதுராந்தகம் காவல்துறை அதிகாரி கலந்து கொண்டு பேரணியில் முன் நின்று நடத்தினர்

இப்பேரணியில் செயலாளர் தேவி, மதுராந்தகம் கிளை செயலாளர் மாதவன், இணைச்செயலாளர் பாண்டியராஜன், செயற்குழு உறுப்பினர்கள் மோகன், ஜெயகுமார், புஷ்பா மாதவன், மோகனரங்கன், ரமேஷ், சௌந்தர்ராஜன், கந்தன்,சமூக ஆர்வலர் கோவிந்தராஜ் கீரப்பாக்கம் கிளை துணைச் செயலாளர் சதீஷ் பாபு,செயற்குழு உறுப்பினர் பம்மல் மோகன் மற்றும் உறுப்பினர்கள் மாற்றுத்திறனாளிகள் ஆண்கள் பெண்கள் உள்ளிட்ட 100க்கு மேற்பட்டோர் தேர்தல் குறித்தான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பதாகைகள் ஏந்தி மதுராந்தகம் நகரத்தில் உள்ள அம்பேத்கார் சிலை ஜங்ஷன் ரோடு முதல் வட்டாட்சியர் அலுவலகம் வரை ஊர்வலமாக சென்று பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார் இந்த ஊர்வலத்தின் போது அனைவரும் கட்டாயமாக வாக்கு பதிவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த ஊர்வலம் நடைபெற்றது



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் பேரூராட்சி 4வது வார்டு பூமலை நகரில் பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ வை ஆதரித்து, திமுக நிர்வாகிகள் தமிழக அரசின் மகத்தான திட்டங்களை விளக்கி கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர்.



■ கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர் பொருத்தும் பணிகளை கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனை குறள், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான், வட்டாட்சியர் ரமேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## தேனி மாவட்டம்தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக பல்வேறு விழிப்புணர்வு

### மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் தலைமையில் நடைபெற்றது






தேனி, ஏப்.17-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, தேனி மாவட்டம், போடேந்திரபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் தொழிற்சாலையில் வாக்காளர்களிடையே 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு

தேனி மாவட்டத்தில் உள்ள 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம் (தனி), 200.போடிநாயக்கனூர் மற்றும் 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகின்ற 23.04.2026 அன்று தேர்தல் நடைபெற உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்வதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தொடர்ந்து இருசக்கர வாகனப் பேரணிகள், கையெழுத்து இயக்கம், சுவரொட்டி விளம்பரம், துண்டுப்பிரசுரம் வழங்குதல், ரங்கோலி, நடைபயணப் பேரணி, மனித சங்கிலி, தெருநாடகம், கும்மிப்பாட்டு, விளம்பரப் பதாகைகள் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வுப் பணிகள் அனைத்து சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம், போடேந்திரபுரம் பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் தொழிற்சாலையில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக வாக்காளர் உறுதிமொழியினை மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் பணியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை பணியாளர் வாகனங்களில் ஒட்டியும், விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களை வழங்கியும் அனைவரும் 100% வாக்களிப்பை உறுதி செய்ய வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, வாக்காளர்களிடையே வாக்களிப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தேர்தல் திருவிழா அழைப்பிதழினை தனியார்தொழிற்சாலை பணியாளர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வழங்கி வாக்குப்பதிவு நாளன்று 100% வாக்களிக்க வருகை தருமாறு அன்புடன் வரவேற்றார். முன்னதாக, 100% வாக்களிப்பை வலியுறுத்தும் விதமாக தனியார் தொழிற்சாலையில் பணிபுரியும் 200க்கும் மேற்பட்ட பணியாளர்கள் THENI 100% VOTE என்ற மனித வடிவத்தில் நின்றும், தேனி மாவட்ட தேர்தல் விழிப்புணர்வு இலச்சினையை வண்ண கோலமிட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இந்நிகழ்வில் திட்ட இயக்குநர்(மகளிர் திட்டம்) சந்திரா, மேலாண்மை இயக்குநர் (LS Mills Ltd) மணிவண்ணன், தொழிலாளர் நல த்துறை துணை இயக்குநர் .பிரேம்குமார், உதவி ஆணையர் (அமலாக்கம்) ராமராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஏ.எடிசன், துணை ஆய்வாளர் பாலசுப்பிரமணியம், துணை பொது மேலாளர் (லிஷி விவீறீடீ லிமீபீ) திரு.நிவாஷ் மற்றும் தனியார் தொழிற்சாலை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ குன்னூர் சட்டமன்ற தொகுதி கீழ் கோத்தகிரி ஒன்றியம் கெங்கரை பக்கடா தூனேரி அவ்வூர் சோலூர்மட்டம் பஜார் பெள்ளடாஓசக்கேரி பகுதியில் நமது குன்னூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சாந்திராமு இரட்டை இலை சின்னத்தில் வாக்கு சேகரித்தார்இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் கேஆர் அர்ஜுனன் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் மாவட்டச் செயலாளர்கலைச் செல்வன் பொதுக்குழு உறுப்பினர் கேகேமாதன் நாகராஜ் சீனிவாசன் கெம்பராஜ் ராமச்சந்திரன் பகுத்தன்கண்ணன் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி நிர்வாகிகள் மற்றும் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் கலந்துகொண்டனர்



## பழைய பெருங்களத்தூர் உள்ளிட்ட பகுதியில் தாம்பரம் தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் கிருத்திகாதேவி கூட்டணி கட்சியினருடன் தீவிர வாக்கு சேகரித்தார்

தாம்பரம் ,ஏப்.17-

செங்கல்பட்டு மாவட்டம்தாம்பரம் தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் கிருத்திகாதேவி பீர்க்கன்காரணை, புதுப் பெருங்களத்தூர், பழைய பெருங்களத்தூர், கண்ணன் அவன்யூ, பாரதிபுரம் உள்ளிட்ட பகுதியில் கூட்டணி கட்சியினருடன் தீவிர வாக்கு சேகரித்தார்,அம்பேத்கார் பிறந்தநாளை முன்னிட்டு முடிச்சூர் சாலையில் அமைந்துள்ள அண்ணல் அம்பேத்கார் சிலைக்கு மாலைபோட்டு மறியாதை செய்தார்.பழைய பெருங்களத்தூரில் மக்கள் கோரிக்கையான பட்டா, பாதாளச்சாக்கடை திட்டம், எரிவாயு தகன மேடை, உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்வேன் என வாக்குறுதி அளித்தார்,உடன்தாம்பரம் மாநகர செயலாளர் எஸ். ஆர். ராஜா, மேயர் வசந்தகுமாரி, பகுதி செயலாளர் எஸ் சேகர், மதிமுக மாவட்ட செயலாளர்மாவை மகேந்திரன், லயன் சங்கர், தேமுதிக மகளிர் அணி மாவட்ட செயலாளர் பார்த்திமா ஸ்டெல்லா, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி சங்கர், வட்டச் செயலாளர் வெங்கடேசன், மற்றும் மதச்சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்



## காளையார்கோவிலில் விஏஓ.முத்து ஏற்பாட்டில் சட்டமேதை அம்பேத்கர் உருவப்படத்திற்கு திமுகவினர் மலர் தூவி மரியாதை

காளையார் கோவில் ஏப்.17-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் வீஏஓ. முத்து ஏற்பாட்டின் பேரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு திமுகவினர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்...

இந்த நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் பணி ஓய்வு போஸ் . காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர் . தொழிலதிபர் கோலாந்தி கோதண்டபாணி . காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய பொருளாளர் ஆர்.எம். எல்.எம்.முருகேசன் . மாவட்ட திமுக பிரதி நிதி . தொழிலதிபர் காளையார்கோவில் ஆர்.எம்.எல்.கருணாநிதி . கிளைக்கழக செயலாளர் . தொழிலதிபர் ஆர்.வி.எஸ். அரங்கநாதன் . வி.எஸ்.எம். எஸ்.எஸ்தர் மேரி ஸ்டீபன். ஒருங்கிணைந்த காளையார்கோவில் ஒன்றிய இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் தொழிலதிபர் ஜான் சந்தியாகு. காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய மேலமைப்பு பிரதி நிதி குப்பமுத்து உள்ளிட்ட திமுக வினர் அண்ணல் அம்பேத்கர் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்...

Format C-1

(for candidate to publish in Newspapers, TV )

Declaration about criminal cases

(As per the judgement dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest foundation &Ors. Vs Union of India &Anr.)

Name and address of candidate: M.காளீஸ்வரன்
S/oமுத்தையா
கதவு எண்..1421, அண்ணா நகர்
பனங்காடி ரோடு, சிவகங்கை தாலுகா
சிவகங்கை மாவட்டம்-630 561

Name of Political party : சுயேட்சை

Name of Election : General Election to Tamil Nadu Legislative Assembly -2026

Name of Constituency : 186 – சிவகங்கை

I, M.KALEESWARAN, a candidate for the abovementioned election, declare for public information the following details about my criminal antecedents:

(A) Pending criminal Cases

| Sl.no. | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section(s) of the Acts Concerned and Brief Description of Offence(s) |
|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் | SC 47/2026 மாற்றம் CBCID குற்ற எண்.1/2014 | Pending | U/S 147,148, 294(b), 302, 120(b) |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

(B)Details about cases of conviction for criminal offences

| Sl.No | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1 | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | இல்லை | இல்லை | இல்லை |
| 3 | இல்லை | இல்லை | இல்லை |

## திருப்பூர் மாவட்டம் பல்லடம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு பயிற்சி



திருப்பூர் ஏப். 17-

திருப்பூர் மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்றத் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவர் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், அவிநாசிபாளையம் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் பல்லடம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 திருப்பூர் மாவட்டத்திற்குட்பட்ட 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம், 112 அவிநாசி(தனி), 113 திருப்பூர் (வடக்கு), 114 திருப்பூர் (தெற்கு), 115 பல்லடம், 125 உடுமலைப்பேட்டை, 126 மடத்துக்குளம் ஆகிய 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றத் பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு பல்லடம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு பல்லடம் வட்டம், அவிநாசிபாளையம் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் காலை மற்றும் மாலை என வகுப்பு நடைபெறுகிறது. காலை பயிற்சி வகுப்பில் வாக்கு சாவடி முதன்மை அலுவலர்கள், வாக்கு பதிவு அலுவலர் 1 அலுவலர்களுக்கும், மாலை பயிற்சி வகுப்பில் வாக்கு பதிவு அலுவலர் 2 மற்றும் 3 என மொத்தம் 2,300 அலுவலர்களும் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. இப்பயிற்சி வகுப்பில் வாக்குச்சாவடி மையம் ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல், வாக்குப்பதிவு இயந்திரம் சரிபார்த்தல், தேர்தல் தொடர்பான படிவங்களை எவ்வாறு பூர்த்தி செய்வது, மாதிரி வாக்குப்பதிவு மேற்கொள்ளுதல் தொடர்பாக தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் டாக்டர். மனிஷ் நாரணவரே பல்லடம் வட்டம், அவிநாசிபாளையம் ஜெய் ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் பல்லடம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்நிகழ்வின்போது, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## "தண்டுவடத் திரவக் கட்டி அகற்றம்" - மதுரையில் அரிதான அறுவைசிகிச்சை வெற்றி!

### மீனாட்சி மிஷன் மருத்துவமனை மருத்துவர்கள் திறமையால் நோயாளி மீண்டும் இயல்பு வாழ்க்கைக்கு




மதுரை, ஏப்.17-

மதுரையில் உள்ள மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தில், அரிதாக ஏற்படும் "சூடோமெனிங்கோசெல்" (pseudomeningocele) எனப்படும் முதுகுத் திரவ கசிவு சிக்கலுக்கு மருத்துவர்கள் வெற்றிகரமாக சிகிச்சை அளித்துள்ளனர்.ன்னதாக முதுகுத் தண்டில் அறுவை சிகிச்சை செய்துக்கொண்ட நோயாளிக்கு, L4-L5 மற்றும் L5-S1 பகுதியில் சிக்கல் ஏற்பட்டு, மூளை திரவம் (CSF) கசிவு ஏற்பட்டது. இதனால் கடும் வலி, நரம்பியல் பிரச்சனைகள் மற்றும் அன்றாட செயல்பாடுகளில் பாதிப்பு ஏற்பட்டது.இதையடுத்து, மருத்துவர்கள் குழு நோயாளியை விரிவாக பரிசோதித்து, மீண்டும் அறுவை சிகிச்சை மேற்கொள்ள தீர்மானித்தனர்.இந்த சிகிச்சையின்போது, கசிவு ஏற்பட்டபகுதி சரிசெய்யப்பட்டதுடன், "லிம்பெர்க் ஃபிளாப்" (Limbergflap) எனப்படும் மேம்பட்ட முறையையும் பயன்படுத்தி பாதிக்கப்பட்ட திசுக்கள்மீள உருவாக்கப்பட்டன.

இந்தசிக்கலான அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நிறைவு பெற்றதுடன், நோயாளி தற்போதுநல்ல முன்னேற்றம் அடைந்து வருகிறார். இந்த சிகிச்சையில் எலும்பியல் மற்றும் ட்ராமடாலஜி துறை மருத்துவர்கள், நரம்பியல் நிபுணர்கள் ஆகியோர் இணைந்து செயல்பட்டனர். அவர்களின் ஒருங்கிணைந்த முயற்சியால் அரிதான இந்த சிக்கல் சிறப்பாக கையாளப்பட்டது. மருத்துவமனை நிர்வாகம்தெரிவித்ததாவது, இத்தகைய சிக்கல்களுக்கு நேர்மையான கண்டறிதல் மற்றும்துல்லியமான அறுவை சிகிச்சை மிக முக்கியம் என்பதையும், நவீன மருத்துவ முறைகள் மூலம் நோயாளிகள் முழுமையான நலம் பெற முடியும் என்பதையும் இந்த சாதனை நிரூபிக்கிறது என கூறினர்.பத்திரிகையாளர் சந்திப்புநிகழ்வில், எலும்பியல்மற்றும் காய சிகிச்சைதுறையின் தலைவர்மற்றும் முதுநிலை ஆலோசகர்டாக்டர் வி. சத்ய நாராயணா, முதுநிலை நிபுணர் டாக்டர் U.T. வாசன் மற்றும் மருத்துவ நிர்வாகி டாக்டர் பி. கண்ணன் ஆகியோர் பங்கேற்றனர்.



■ தொகுதிமறுவரையறைக்குஎதிராக தமிழ்நாடு முழுவதும் கருப்புக் கொடிப் போராட்டம் நடைபெறுகிறதென்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். அதன்படி தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சரும், மதுரை மத்திய சட்டமன்ற தொகுதியின் திமுக வேட்பாளருமான முனைவர் பழனிவேல் தியாகராஜன் தமது இல்லத்தின் முன்பு கருப்பு கொடியினை உயர்த்தி பிடித்தார்.



■ கிருஷ்ணகிரியில் தொகுதி மறுவரையறையை எதிர்த்து கருப்பு சட்டை அணிந்து, கருப்பு கொடி ஏற்றிய கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்ட செயலாளர், பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் எம் எல் ஏ., மசோதா நகலை எரித்து கண்டன முழக்கம்.! எழுப்பினார்.திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை வடக்கு ஒன்றியம் கீழப்பூங்குடியில் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு



சிவகங்கை ஏப்.17-

சிவகங்கை வடக்கு ஒன்றிய செயலாளர் திருமலை ஆ.முத்துராமலிங்கம் தலைமையிலும் . ஒன்றிய துணைச் செயலாளர்களான வில்லிபட்டி பண்ணையார் இராமமூர்த்தி . ஒன்றிய மேனாள் கவுன்சிலர் பத்மாவதி பிரபாகரன் . மாவட்ட பிரதிநிதிகள் லெ.சோமசுந்தரம் சோழபுரம் மாரி ஆகியோரது முன்னிலையிலும் வடக்கு ஒன்றியபகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்... இதனிடையே கீழப்பூங்குடி கிளை திமுக அவைத் தலைவர் மா.தினகரன் மற்றும்கிளைக் கழக செயலாளர் சித.இராமநாதன் ஆகியோரது தலைமையில் வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது...ஊரின் மையப்பகுதியில் உள்ள தேர்தல் பணமனை அருகே பெண்கள் ஆரத்தி எடுத்தும். பட்டாசு வெடித்தும். மாலை கைத்தறியாடைகள் அணிவித்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர்...

இந்த நிகழ்ச்சியின் போது கீழப்பூங்குடி கிளைக் கழக திமுக பிரமுகர்களான துணைச் செயலாளர் ஏ.ஆர். பழனி . கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் சுப.முருகன் . விடுதலைச் சிறுத்தைகள் அம்பேத். . ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் செல்வம். மாணவரணி சதீஷ் . மகளிரணி துணை அமைப்பாளர் நித்யா . பாக முகவர் ராஜா . காங்கிரஸ் பெரி. முத்தையா கம்யூனிஸ்ட் முத்துவன்னி . த.சரவணன் . விமுருகேசன் ராசு . ராஜா உள்ளிட்ட பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு வேட்பாளர் கருணாஸ் க்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்...

வேட்பாளருடன் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன் மேனாள் சேர்மன் மஞ்சுளா பாலச்சந்தர். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கிங் கார்த்திக் . ஒருங்கிணைந்த ஒன்றிய முன்னாள் பொருளாளர் சக்கந்தி அ.காஜா மைதீன். மாவட்ட மகளிரணி துணைததலைவர் மார்கரேட் கமலா பத்தினாதன். மாவட்ட ஐடி விங் முப்பையூர் சிவா . மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் திருமலை குமணன் . மாவட்ட ஐடி விங் வாடிவாசல் முத்துவேல் செல்வம் . ஒன்றிய மகளிரணி அமைப்பாளர் லதா நாகராஜன் . உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டு உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்...

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161